# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை
## அசல் வழக்கு எண். 27/2022

வா.சா.2– குறுக்கு விசாரணை – நாள் 09–07–2025.

பெயர் = சுப்புராஜ் வா.சா.–2

வா.சா.–2 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி 1ம்பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

(1) நான் விவசாயம் பார்த்து வருகிறேன். வாதி முனியசாமி எனக்கு சொந்தமா என்றால் மகன் முறை வேண்டும். ஆனந்த், மாரியம்மாள் எனக்கு உறவினர்கள் இல்லை என்றால் சரிதான். வாதி முனியசாமியின் வீடு தெரியும் என்றால் சரிதான். முனியசாமி வீட்டிற்கு கிழக்கே அவரது தம்பி முருகன் வீடு உள்ளது என்றால் சரிதான். முனியசாமி, முருகன் வீட்டிற்கு தெற்கே 3 அடி தென்வடல் சந்து உள்ளது என்றால் சரிதான். அது அவருடைய சொந்த சந்து என்றால் சரிதான். முனியசாமி, முருகன் ஆகியோர்க்கு வடக்கு பார்த்த வாசல் என்றால் சரிதான். மேற்படி இருவர் வீட்டிற்கும் வடக்கே 5 அடியில் தென்வடல் சந்து உள்ளது என்றால் சரிதான். அந்த தென்வடல் சந்தில் வாதியும், அவருடைய தம்பியும் படி கட்டியுள்ளார்கள் என்றால் சரிதான். வடக்கே உள்ள சந்து வாதிக்கும், முருகனுக்கும் சொந்த சந்து என்றால் சரிதான். முருகன் என்பவருக்கு கிழக்கே வாசல் உள்ளதா என்றால் இல்லை. முருகன் வீட்டை ஒட்டி கிழக்கே ரோடு உள்ளது என்றால் சரிதான். முனியசாமி, முருகன் வீட்டிற்கு கிழமேல் அடியும், தென்வடல் அடியும் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். வாதி வீட்டிற்கு வடக்கே வாத்தியார் வீடு உள்ளது பெயர் தெரியாது.

(2) எல்.பி.சி வாத்தியார் வீடு என சாட்சி கூறுகிறார். மேற்படி வாத்தியார் வீட்டிற்கு கிழக்கு பார்த்த வாசல் என்றால் சரிதான். வாத்தியார் வீட்டிற்கு மேற்கே 1ம் பிரதிவாதி ஆனந்த் வீடு உள்ளது என்றால் சரிதான். வாத்தியார் வீட்டிற்கு தென்வடல் அளவு எவ்வளவு என தெரியாது. 1ம் பிரதிவாதி ஆனந்த் வீடு சென்ட்ரிங் வீடு என்றால் சரிதான். இரண்டு மாடி வீடு கட்டியுள்ளார் தலைவாசல் வடக்கு பார்த்தது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வீடு கட்டி 30 வருடம் இருக்குமா என்றால் 15 முதல் 20 வருத்திற்குள் இருக்கும். அவர் வீட்டிற்குள் சென்று பார்த்தேனா என்றால் இல்லை. அவர் வீட்டிற்கு தென்பக்கம் காம்பவுண்டு சுவர் கட்டியுள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வீடு கிழமேல் தென்வடல் எவ்வளவு

அளவுள்ளது என தெரியாது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வீடு கட்டும்போதே தெற்கே காம்பவுண்டு சுவரும் சேர்த்து கட்டிவிட்டார் என்றால் சரிதான். அந்த காம்பவுண்டு சுவருக்குள் மாடிக்கு செல்வதற்கு மாடிப்படி கட்டியுள்ளார் என்றால் சரிதான். அதுபோக வண்டி நிறுத்துவதற்கு தகரசெட் அமைத்துள்ளார் என்றால் சரிதான். தென்கிழக்கு மூலையில் ஒரு பாத்ரூம் கட்டியுள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கட்டியுள்ள காம்பவுண்டு சுவர் 10 அடி இருக்குமா என்றால் அளவு எனக்குத் தெரியாது. 1ம் பிரதிவாதி ஆனந்த் வீட்டிற்கும், வாத்தியார் வீட்டிற்கும் இடையே பொதுச்சுவர் உள்ளதா என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. வாதி வீட்டிற்கும், 1ம் பிரதிவாதி வீட்டிற்கும் இடையே எத்தனை அடி சந்து உள்ளது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. மேற்படி சந்து இருவருக்கும் பொது சந்தா என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. அந்த சந்து வழியாகத்தான் 1ம் பிரதிவாதி அவர் வீட்டு கழிவுநீரை கடத்துகிறார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது.

(3) 1ம் பிரதிவாதி ஆனந்த் மேற்கு காம்பவுண்ட் சுவரில் கிரில் கேட் வைத்துள்ளார் என்றால் சரிதான். ஆனந்த் மாரியம்மாள் வீட்டிற்கு இடையே பொதுச்சந்து உள்ளது என்றால் சரிதான். அது எத்தனை அடி என எனக்குத் தெரியாது. மாரியம்மாள் வீடு கட்டி எத்தனை வருடம் இருக்கும் என்றால் 15–20 வருடம் இருக்கும். 2ம் பிரதிவாதி வீட்டிற்கு தெற்கே அவருக்கு பாத்தியப்பட்ட காலியிடம் உள்ளது என்றால் சரிதான். அதில் மண் காம்பவுண்டு சுவர் கட்டியுள்ளார் என்றால் இல்லை. ஒரு வேப்பமரம் உள்ளது என்றால் சரிதான். வாதி முனியசாமி எந்த சொத்துக்காக வழக்கு போட்டுள்ளார் என எனக்குத் தெரியுமா என்றால் அவரது அப்பாவின் சொத்திற்காக வழக்கு போட்டுள்ளார். அதன் சர்வே எண், நான்கு மால் அளவுகள் தெரியுமா என்றால் தெரியாது. வாதி முனியசாமியின் தாயார் பெயர் பொன்னுத்தாய். முனியசாமியும், அவரது தம்பியும் என்ன பத்திரங்கள் ஏற்படுத்திக்கொண்டார்கள் என்று எனக்குத் தெரியாது. 22.01.2018ம் தேதி 16.08.2019ம் தேதியில் வாதியும், அவரது தம்பியும் என்ன பத்திரம் ஏற்படுத்திக்கொண்டார்கள் என்ற விவரம் தெரியாது. 1,2 பிரதிவாதிகள் என்ன எதிர்வாதம் செய்கிறார்கள் என்ற விவரம் தெரியாது. வழக்கு பற்றிய விவரங்கள் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். தாவாச்சொத்து பற்றிய எந்த விவரமும் எனக்குத் தெரியாது. வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் வாதிக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

(1) நீதிமன்றத்திற்கு வரச்சொல்லி அழைப்பாணை எதுவும் வந்ததா என்றால் இல்லை. வாதி முனியசாமி நீதிமன்றத்திற்கு வரச்சொல்லி அழைத்து வந்தார் என்றால் சரிதான். தாவாச்சொத்தின் வழியாக நான் சென்று வருவேன் என்றால் சரிதான். நீதிமன்றத்திலிருந்து தாவாச்சொத்தை அளவீடு செய்ய நீதிமன்ற ஆணையர் வந்த விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. 2ம் பிரதிவாதி மாரியம்மாளும் வாதியும் உறவினர்களா என்றால் இல்லை. ஒரே சமூகத்தை சார்ந்தவர்கள் என சாட்சி கூறுகிறார். 2ம் பிரதிவாதி வீட்டில் உடைந்த ஓட்டுத்தாழ்வாரம், காரைகட்டிடம் உள்ளது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி வீட்டிற்கு வடக்குப்பக்கம் துணியால் கட்டப்பட்ட குளியலறை உள்ளது என்றால் சரிதான். மேற்படி குளியலறை 1.1/2 அடி உயர பேஸ்மட்டத்தில் உள்ளது என்றால் சரிதான். குளியலறைக்கு வடக்கு திசையில் பொதுப்பாதை உள்ளது என்றால் சரிதான். மாரியம்மாள் வீடு கட்டி 40 வருடம் இருக்கும் என்றால் ஞாபகம் இல்லை.

(2) 2ம் பிரதிவாதியின் வீட்டிற்கு மேற்குபுறத்தில் பொதுச்சந்து உள்ளது என்றால் சரிதான். எத்தனை அடி என்ற விவரம் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியின் வீட்டிற்கு தென்பக்கம் உள்ள வேப்பமரத்தின் நிழல் அவருடைய வீட்டில் விழும் என்றால்சரிதான். வேப்பமரத்தின் தெற்கே காலியிடம் உள்ளது என்றால் சரிதான். அந்த மரத்தை மாரியம்மாள்தான் பராமரித்து வருகிறார் என்றால் சரிதான். வாதிக்கும், 2ம் பிரதிவாதிக்கும் என்ன பிரச்னை என்று தெரியுமா என்றால் இடப்பிரச்னை என்று தான் தெரியும். மாரியம்மாள் வீட்டில் பத்திரம் எழுதிக்கொடுத்த விவரம் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். சொத்தின் நான்குமால் மற்றும் அளவுகள் பற்றிய விவரம் எனக்குத் தெரியாது என்றாலும், வாதி அழைத்ததன்பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆதிகாலத்தில் மேற்படி இடங்கள் காலியாக இருந்த விவரம் எனக்குத் தெரியும் என சாட்சி கூறுகிறார். மாரியம்மாள் வீட்டிலுள்ள கதவு உள்பக்கமாக திறக்கும் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. வழக்கின் விவரங்கள் எனக்குத் தெரியாது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2025.07.09 14:21:29 +0530